STC.No. 49–2024

நாள் 12.03.2026.

P.W.1 – (முருகேசன் )

எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் இல்லை என்றால் சரி. நானும் எதிரியும் உறவினர்கள் இல்லை என்றால் சரி. நானும் எதிரியும் ஒன்றாக வியாபாரம் செய்யவில்லை என்றால் சரி. எதிரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரி என்னிடம் சரக்கு வாங்க வருவார். நான் வத்திராயிருப்பில் வடக்கு அக்ரஹாரம் தெருவில் மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் செய்கிறேன். எதிரி சுமார் 4,5 ஆண்டுகள் என்னிடம் சரக்கு வாங்கி வந்தார். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரி என்னிடம் காய்கறி வாங்கி மாதாமாதம் பணம் கொடுப்பார் எனச் சொல்லியுள்ளேன். எதிரிக்கு உண்டான வரவு செலவு பேரேடு என்னிடம் உள்ளது என்றால் இல்லை. நான் எதிரி என்னிடம் 5 வருடங்கள் காய்கறி வாங்கி வரவு செலவு வைத்துள்ளதாக சொல்வதால், அதற்கான வரவு செலவு பேரேடு என்னிடம் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக என்னிடம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பேப்பரில் எழுதி மாதாமாதம் பணம் கொடுத்தவுடன் பேப்பரை கிழித்து விடுவேன்.

25.08.2023 அன்று நான் கடன் கொடுத்ததாக சொல்வது அந்த தொகையை நான் அன்று வங்கியில் இருந்து எடுத்து வைத்தேனா என்றால் இல்லை, வீட்டில்தான் வைத்திருந்தேன். நான் கடன் கொடுத்ததாக சொல்வது எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் வருமான வரி செலுத்துகிறேன். நான் 2023–2024 நிதி ஆண்டிற்கு வருமான வரி செலுத்தியுள்ளேன். அந்த ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கில் நான் இந்த வழக்கின் ரூ.11 லட்சத்தை காண்பிக்கவில்லை. அவ்வாறு வருமான வரிக் கணக்கில் அந்த தொகையை காண்பிக்காதது அரசை ஏமாற்றும் செயல் என்றால் தெரியவில்லை. தோப்பு வருமானம். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் தோப்பு வருமானம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரியிடம் இருந்து எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் காசோலையை அன்றைய தேதிலேயே கொடுத்துவிட்டார். சாட்சி தற்போது 05.01.2023 அன்று காசோலை கொடுத்ததாக தெரிவித்தார்.

கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் வேறு எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் ஆம். பெரிய தொகையான ரூ.11 லட்சத்தை எந்த ஆவணமும் எழுதி வாங்காமல் வட்டி பேசாமல் எதிரிக்கு வழங்கியதாக சொல்வது இயல்பான மனித நடவடிக்கைக்கு முரணானது என்றாலும் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை, கைமாற்றுக் கடனாக கொடுத்தேன். எதிரி என்னிடம் வீட்டு தேவைக்கு காய்கறி வாங்குவதற்கான தொகையையே மாதம் ஒரு முறை செலுத்துவதாக என் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. அவ்வாறு இருக்கையில் எதிரிக்கு நான் ரூ.11 லட்சம் கொடுத்ததாக சொல்வதும், எதிரி அதனை ஒரு வார காலத்தில் திருப்பி கொடுத்துவிடுவதாக சொல்வதும் நம்பக்கூடிய வகையில் இல்லை என்றால் சரியல்ல.

K. Murugesan

ஏலக்காய் வியாபாரம் செய்வதாக புகைப்படம் காண்பித்தார். 2023ம் ஆண்டு மே மாதம் எதிரியின் வீட்டிற்கு பால்காய்ச்சும் நிகழ்விற்கும் என்னிடம்தான் மொத்தமாக காய்கறி வாங்கினாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி என்னிடம் அன்றாடம் காய்கறி வாங்கிய பாக்கி மற்றும் வீடு பால்காய்ச்சும் நிகழ்விற்கு காய்கறி வாங்கிய பாக்கி மொத்தம் ரூ.1,58,000/- என்றாலும் அந்த கடன் தொகைக்கு தான் எதிரி கையொப்பம் மட்டும் செய்து என்னிடம் காசோலை வழங்கினார் என்றாலும் நான் அதிக பணம் பறிக்கும் நோக்கில் ரூ.11 லட்சத்திற்கு அந்த காசோலையை நிரப்பி எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. காய்கறி வகைக்கான கடனை தவிர வேறு எந்த தொகையும் எதிரி என்னிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் காய்கறி சிட்டைக் குறித்து அவர் கட்சியிடம் விபரம் கேட்டு வேண்டி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

K. Murugesan

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/3/24

நீதித்துறை விரைவு நடுவர்.
திருவில்லிபுத்தூர்.